






# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி

மலர் 1 இதழ் 32 06.08.2025




**HH at Sethu snanam**



**HH at Aadhi Jagannatha perumal koil Goshala**

# உள்ளே....

## படித்து பின்பற்ற வேண்டிய

## முத்துக்கள்

## உபதேசங்கள்



# முத்துக்கள்

1. விரும்பப்படுமவற்றுள் மிக உயரிய பயனாகிய மோக்ஷ புருஷார்த்தத்தைப் பெற தத்வங்களையும் ஹிதங்களையும் அவசியம் நாம் அறிய வேண்டும்.

தத்வங்களை விரிவாகத் தெளிவிக்கும் நூல்களான ஸ்ரீபாஷ்யாதிகள் - ஸம்ஸ்க்ருதமொழியிலுள்ளன.

ஹிதங்களான ரஹஸ்யார்த்தங்களைத் தெளிவிக்கும் நூல்கள் மணிப்ரவாள நடையிலுள்ளன.

இவற்றுள் மிகச் சிறந்த உயரிய நூல் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம். ஸ்ரீ வைஷ்ணவர்களால் கட்டாயம் கற்று அறிய வேண்டிய க்ரந்த சதுஷ்டயம் எனும் நான்கு நூல்களுள் இதுவும் ஒன்றாகும்.

இதை இயற்றியருளியவர் நம் ஸ்வாமி தேசிகன்.

இதை ரஹஸ்ய சாஸ்த்ரம் என பெரியோர் போற்றியுகப்பர்.

----ஸ்ரீகோபாலதேசிக மஹாதேசிகன், ஸ்ரீ பௌண்டரீகபுரம் ஸ்வாமி ஆஸ்ரமம்.

****************************************************************************

2. மோக்ஷம் அடைவதற்குச் சரணாகதி அதாவது ப்ரபத்தி முக்கியம். அது எனக்கு ஆகிவிட்டது. மேற்கொண்டு எதுவும் தெரிய வேண்டியதில்லை - என்று ப்ரபத்தி செய்துகொண்டவர்கள் சொல்லலாம். ஆனாலும், ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தைக் காலக்ஷேபமாகக் கேட்கும்போது, ஸூக்ஷ்ம விஷயங்களை, அறிவு க்ரஹிக்கிறது -

* ப்ரபத்திக்குப் பிறகு, ப்ரபன்னன், ஜீவித பர்யந்தம் எப்படி வாழவேண்டும்
* ப்ரபத்திக்குப் பிறகு, தெரிந்து செய்யும் பாவங்கள், அறியாமல் செய்யும் பாவங்கள் எப்படி அழிகிறது -
* அஷ்டாக்ஷரம், த்வயம், சரமச்லோகம் இவற்றுக்கான அர்த்தங்கள், அவற்றைத் தொடர்ந்து ஜபிக்கவேண்டிய காரணம்,
* விசிஷ்டாத்வைத சித்தாந்தம்,
* முமுக்ஷு என்றால் யார், அவன் அறிய வேண்டியது என்ன,
* அர்த்த பஞ்சகம் என்கிறார்களே அது என்ன,
* மூன்று தத்வம்,
* தர்மபூத ஜ்ஞானம்,
* பகவானின் பர, வ்யூஹ, விபவ, அர்ச்சை .
* அந்தர்யாமி விவரம்,
* பரதேவதை யார்,
* ப்ரவ்ருத்தி மார்க்கம் எது.
* நிவ்ருத்தி மார்க்கம் எது.

* மோக்ஷத்துக்கு எது உபாயம்
* பகவான் ப்ரபன்னனுக்குச் செய்யும் உபகாரம்.
* ப்ரபத்தி செய்துகொள்ள என்ன யோக்யதை,
* ப்ரபத்தியின் அங்கங்கள்.

* ப்ரபத்திக்குப் பிறகு ப்ரபன்னனின் கடமைகள்,

இப்படிப்பலப்பல ரஹஸ்யங்களை ஸ்வாமி தேசிகன், ஶ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் அருளியிருக்கிறார்.

.......ஶ்ரீ கைங்கர்ய

*****************************************************************************

3. 1. बहूनां जन्मनामन्ते ज्ञानवान् मां प्रपद्यते ।
वासुदेवः सर्वमिति स महात्मा सुदुर्लभः ।।

கீதை. (7-19) : அனேக புண்ய ஜந்மங்களின் முடிவில் ஒருவன் ஜ்ஞாநியாகி என்னைப் பஜிக்கிறான்.

2. सेतिहासपुराणैस्तु वेदैर्वेदान्तसंयुतैः ।
ये जन्मकोटिभिः सिद्धाः तेषामन्तेऽत्र संस्थितिः ।।

பௌ. ஸம். (38-305) : அனேககோடி ஜந்மங்களில் பகவானிடமிருந்து ஐச்வர்யம் முதலிய பலன்களையடைந்தவர்களே முடிவில் பகவானை அடைவதற்கு ஸாதநமான பக்தியையோ ப்ரபத்தியையோ செய்வார்கள்.

3. பாஞ்சராத்ரம் அனேகமாயிரம் ஜந்மங்களில் செய்த தபஸ்ஸாலும், த்யானத்தாலும், பாபங்கள் நசிக்கப் பெற்றவர்களுக்கு க்ருஷ்ணனிடத்தில் பக்தியுண்டாகிறது.

4. கீதை. (12-7) : அர்ஜுநனே! என்னிடம் மனம் வைத்தவர்களுக்கு யமன் போன்ற ஸம்ஸாரமாகிய கடலிலிருந்து சீக்கிரம் கைதூக்குபவனாக ஆவேன்.

.............................................................................

## 4.கருணையுள்ள ஆசார்யன்

अन्धोऽनन्ध-ग्रहणवशगो याति रङ्गेश यद्वत्
पङ्गुर्नौका -कुहर-निहितो नीयते नाविकेन ।
भुङ्क्ते भोगानविदित-नृपस्सेवकस्यार्भकादिः
त्वत्संप्राप्तौ प्रभवति तथा देशिको मे दयाळुः ।।

ந்யாஸ திலகம் (21) : ரங்கநாதனே! குருடன் கண் உள்ளவனைப் பிடித்துக்கொண்டு அவன் உதவியால் நடந்து செல்லுகிறான். நொண்டி, ஓடத்துக்குள் வைக்கப்பட்டு ஓடக்காரனால் கொண்டு போகப்படுகிறாள். ராஜஸேவகனின் புதல்வன் முதலியவர்கள் அரசனையறியாதபோதிலும் எல்லாப் போகங்களையும் அநுபவிக்கிறார்கள். அப்படியே கருணையுள்ள ஆசார்யன்,நான் உன்னையடையும்படி செய்கிறான்.

## 5. ப்ரபந்தன் கவனிக்கவேண்டியவை

ப்ரபந்தன்,மனம்,வாக்கு, காயம் ஆகிய முக்கரணங்களாலும் கைக்கொள்ளவும் விலக்கவும் வேண்டியவற்றுள் முக்கியமானவை வருமாறு:-

1. மறக்க வேண்டியது -- உலகவின்பங்களை அநுபவிப்பதில் ஆசை

2. நினைக்க வேண்டியது -- ஆசார்யனுடைய முதற்கடாக்ஷம் முதலான உபகாரம்.

3. சொல்லக்கூடாதது -- தன் மேம்பாடு.

4. சொல்ல வேண்டியது --த்வயம்.

5. முக்கரணங்களாலும் விலக்க உரியது --ப்ரஹ்மவிதபசாரம்

6. முக்கரணங்களாலும் கைக்கொள்ள உரியது-- பகவத் பாகவத- ஆசார்ய கைங்கர்யம்.

## *6.ஸ்ரீ பாஷ்யத்தில், நான்கு அத்யாயங்களில் பகவானது நான்கு பெருமைகளை சொல்வதாக அமைகிறது -*

*1. காரணத்வம்-ஸ்ரீநாராயணனே உலகைப் படைக்கும் பர-ப்ரஹ்மம் என வேதம் சொல்கிறது.*

*2. அபாத்யத்வம் -எந்த விதத்தாலும் மறுக்க முடியாதபடி அவனது அந்த பெருமை உள்ளது.*

*3. உபாயத்வம் - மோக்ஷத்துக்கான உபாயம் செய்பவர்களுக்கு அவனே மோக்ஷம் அளிப்பவன்;*

*4. உபேயித்வம் - பலனும் அவனே; மோக்ஷத்தில் பர-ப்ரஹ்மமான அவனை அடைந்து அனுபவிப்பதே பலன்.*

*ஒவ்வொரு அத்யாயத்துக்கும் ஒவ்வொரு பெயர் உண்டு; ஒவ்-வொரு பாதத்துக்கும் தனிப்பெயர்; ஒவ்வொரு அதிகரணத்துக்கும் தனிப்பெயர்.*